252

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE/JULY, 2013

## SOC 2.12 Mass Communication and Sociology

நேரம்: 03 மணித்தியாலயம்

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

01. "சிறப்பான தொடர்பாடலே ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க உதவும்." சிறப்பான தொடர்பாடலின் முக்கியத்துவத்தை வைத்து இக்கூற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

02. "மனித செயற்பாடுகள் அத்தனையையும் நிர்ணயிப்பதில் ஊடகங்களுக்கு பெரும் பங்குண்டு." இக்கூற்றினை ஊடகங்களின் செயற்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு அலசுக.

(20 புள்ளிகள்)

03. "தனிமனித பண்பாட்டு பரிமாற்றமே சமூகத்தின் பண்பாட்டை உருவாக்கும்." ஊடகங்களுக்கும் பண்பாட்டு பரிமாற்றத்திற்குமிடையிலான தொடர்புகளை மேற்கூறிய கூற்றுடன் தொடர்புபடுத்தி கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

04. "இன அடையாளங்களைக் கட்டமைப்பதில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன." இலங்கை சிங்கள, தமிழ் ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை விமர்சிக்குக.

(20 புள்ளிகள்)

05. இலங்கையின் இன ரீதியான யுத்தத்திற்கு பின்னரான ஊடக செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மேலுள்ள வினாக்களுக்கு விடையளிக்கு.

(i) இன ஐக்கியம் என்றால் யாது? (5 புள்ளிகள்)

(ii) இன ஐக்கியத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? (6 புள்ளிகள்)

(iii) அக்காரணிகளை ஊடகங்கள் எவ்வாறு செயற்படுத்தலாம்? (9 புள்ளிகள்)

06. “இலங்கைத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் தென்னிந்திய நாடகங்கள் குடும்ப பண்பாடு ஒன்றினை நிறுவுவதில் தவறிவிடுகின்றன.” இக்கூற்றுக் குறித்து விமர்சன ரீதியாக கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

07. “விளம்பரங்கள் பால்நிலை ரீதியான வேறுபாடுகளை ஊக்குவிப்பதில் பெரும் பங்குவகிக்கின்றன.” இக்கூற்றினை தக்க ஆதாரங்களுடன் எடுத்து விளக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டு குறித்து விரிவாக கருத்துரைக்குக.

(அ) தொடர்பாடல் வகைகள்

(ஆ) தொடர்பாடல் கோட்பாடுகள்

(இ) ஊடக ஒழுக்க நெறிக் கோட்பாடும் இலங்கை ஊடகத்துறையும்

(ஈ) இலங்கையில் வளர்ந்து வரும் குறுந்திரைப்படங்கள்

(2X10=20 புள்ளிகள்)